வேளாண்மை இணை இயக்குநர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு ச.கண்ணையா, பி.எஸ்ஸி(விவ), எம்.பி.ஏ.,

பநி3/10651/2023 நாள் : 10.06.2024

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நேரடி நியமனம் தொகுதி-4ல் அடங்கிய இளநிலை உதவியாளர்(பிணையம்) பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நியமன ஆணை வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் - குறித்து.

பார்வை : 1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.1919//PSD-D2/2023 நாள்:02.09.2023
2. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.1919//PSD-D2/2023 நாள்:16.11.2023
3. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.அநிபி5/97025/2023-2, நாள் :08.12.2023
4. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.பநி3/10651/2023(1) முதல் (3) முடிய நாள்:15.12.2023

**ஆணை:**

பார்வை (1)ல் கண்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி 4-ன் (அறிவிக்கை எண்.07/2022-ல் தேர்வு தேதி 24.07.2022) மூலம் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு (Selected Provisionally) வேளாண்மைத் துறைக்கு இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை (3)ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 3 இளநிலை உதவியாளர் (பிணையம்)-களை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

இந்த ஒதுக்கீடு ஆணையைத் தொடர்ந்து 3 இளநிலை உதவியாளர் (பிணையம்)-களுக்கும் புதிய ஊதிய ஏற்ற முறையில் பார்வை (4)ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டு தனியர் உரிய அலுவலகங்களில் இணைப்பில் கண்டவாறு பணியேற்றுக்கொண்டனர். இப்பணியாளர்களில் " தமிழ்வழி கல்வி பயின்றவர்களுக்கு (PSTM) அதற்கான உண்மைத் தன்மைச்சான்று உரிய அலுவலர்களிடமிருந்து பெற்ற பின்னரே பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என பார்வை(2)-ன் பத்தி எண்.16-ல் தெரிவிக்கப்பட்டதன்படி உண்மைத்தன்மைச்சான்று பெறப்பட்டுள்ளது.

இதன்படி இணைப்பில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இளநிலை உதவியாளர் (பிணையம்) பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடித்திட வேண்டும். இப்பணியாளர்கள் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து, அதனைத் தொடர்ந்து தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணை வழங்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளை பெறபத் தகுதியுடையவர்கள் என ஆணையிடப்படுகிறது.

"இந்தப் பணிவரன்முறையானது, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் மீதான இறுதி ஆணைக்குக் கட்டுப்பட்டதாகும்." (The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Honourable High Court of Madras / Madurai Bench of the Honourable High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination - IV (Group - IV)).

S. Keeum 10.6.24

வேளாண்மை இணை இயக்குநர்
இராமநாதபுரம்.

10/6/24

பெறுநர்

1. திரு.இர.விக்னேஷ்வரன், இளநிலை உதவியாளர் (பிணையம்)
   வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், நயினார்கோயில்
   **வழி மற்றும் நகல் :** வேளாண்மை உதவி இயக்குநர், நயினார்கோயில்.

2. செல்வி.வீ.பாலம்மாள்
   இளநிலை உதவியாளர் (பிணையம்)
   வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், சத்திரக்குடி.
   **வழி மற்றும் நகல் :** வேளாண்மை உதவி இயக்குநர், சத்திரக்குடி.

3. திருமதி.அ.பாத்திமா பர்ஜானா,
   இளநிலை உதவியாளர் (பிணையம்)
   வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஆர்.எஸ்.மங்கலம்
   **வழி மற்றும் நகல் :** வேளாண்மை உதவி இயக்குநர், ஆர்.எஸ்.மங்கலம்

நகல் : வேளாண்மை இயக்குநர், சென்னை (அநிபி-5 பிரிவு) அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : பநி3 இருப்புக் கோப்பிற்கு.

வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
இராமநாதபுரம்.

## இணைப்பு

## இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டவர்கள் விவரம்

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் தேர்வாணைய வரிசை எண் / பதிவு எண் | இளநிலை உதவியாளர் (பிணையம்)- ஆகப் பணியில் சேர்ந்த நாள் | (PSTM) | உண்மைத்தன்மை சான்று பெறப்பட்டுள்ளதா | பணிவரன் முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | இர.விக்னேஷ்வரன் | 17.12.1998 | 119/2906038299 | 20.12.2023 மு.ப. | இல்லை | - | 20.12.2023 மு.ப. | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், நயினார்கோயில் |
| 2. | வீ.பாலம்மாள் | 28.09.2000 | 123/2607012235 | 24.01.2024 மு.ப. | இல்லை | - | 24.01.2024 மு.ப. | வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், சத்திரக்குடி. |
| 3. | அ.பாத்திமா பர்ஜானா | 08.05.1990 | 184/1004070366 | 22.12.2023 மு.ப. | ஆம் | ஆம் | 22.12.2023 மு.ப. | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஆர்.எஸ்.மங்கலம் |

S. Veeraa 10-6-24

வேளாண்மை இணை இயக்குநர்,
இராமநாதபுரம்.

10/6/24